## சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின்

# தூய்மை இயக்கத் திட்டப் பணிகள் குறித்த ஆய்வு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!



சென்னை, பிப்.1-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (30.1.2026) தலைமைச் செயலகத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் தூய்மை இயக்கத் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் தூய்மையாக்க வேண்டும். குப்பை மேலாண்மை சரியாக மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக, தூய்மை இயக்கம் திட்டம் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தூய்மை இயக்கம் சார்பில் முதற்கட்டமாக, சென்னை தலைமைச் செயலகம் உள்பட மாநிலம் முழுவதும் அரசு அலுவலகங்களை சுத்தம் செய்யும் வகையில் பிளாஸ்டிக் கழிவுகள், மின்னணு கழிவுகள், உலோகக் கழிவுகள், காகித கழிவுகள், கண்ணாடி கழிவுகள், பயன்படுத்த இயலாத மரத் தளவாடங்கள் போன்ற பல்வேறு வகையான கழிவுகளை சேகரிக்கும் மாபெரும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடந்த 12.1.2026 முதல் 25.1.2026 வரை நடைபெற்ற “குப்பைத் திருவிழா”வின் மூலமாக தமிழ்நாடு முழுவதும் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. குப்பைத் திருவிழாவில் 13,400 க்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள், 14,160 கழிவு ஒருங்கிணைப்பாளர்கள், 1.25 லட்சம் சுய உதவிக்குழுப் பெண்கள் பங்களிப்பின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 1,411 டன் பிரிக்கப்பட்ட உலர் கழிவுகள் பெறப்பட்டு நிலத்திற்கு செல்லாமல் தடுக்கப்பட்டது.

இதற்கு முன் 90,000 திற்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்களில் நடைபெற்ற கழிவு சேகரிப்பு இயக்கம் மூலமாக பெறப்பட்ட கழிவுகள் மற்றும் இக்குப்பைத் விழாவில் பெறப்பட்ட கழிவுகள் மூலமாக ரூபாய் 4 கோடியே 30 லட்சத்திற்கும் மேல் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் அனைவரும் கழிவுகளைப் பிரித்து வழங்கி ஒன்றிணைந்து தூய்மையான தமிழ்நாட்டிற்கு தங்கள் பங்களிப்பை ஆற்றிட விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், ஒவ்வொரு மாதமும் குப்பைத் திருவிழா நடைபெற உள்ளது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பா.பொன்னையா, நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி. ஷஜீவனா உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மதுரை தெற்கு மாவட்டப் பொருளாளர்

# கொம்பாடி தங்கம் மாரடைப்பால் மறைவு!

### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - சேடபட்டி மு.மணிமாறன் - கழகத்தினர் நேரில் அஞ்சலி!

மதுரை, பிப். 1–

மதுரை தெற்கு மாவட்டப் பொருளாளர் கொம்பாடி தங்கம் மாரடைப்பால் மறைவெய்தினார். அன்னாரின் உடலுக்கு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் தகவல் அறிந்ததும் இல்லம் சென்று அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினர்.

அதன் விவரம் வருமாறு:–

மதுரை தெற்கு மாவட்டப் பொருளாளரும் முன்னாள் கொம்பாடி ஊராட்சி மன்ற தலைவருமாக இருந்தவர் கொம்பாடி தங்கம் வயது (55). இவர் திடீர் மாரடைப்பால் இயற்கை எய்தினார்.



இவருக்கு ஜெகதா என்ற மனைவியும் விஜய பாண்டியன் என்ற மகனும் இந்து என்ற மகளும் உள்ளனர்.

இவர் கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் பதவி வகித்ததுடன் தலைமைக் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்களில் ஒருவராவார்.

தனது அனைத்துப் பொறுப்புகளிலும் சிறப்பாக பணியாற்றி எல்லோரிடமும் பாச மிக்கவராக இருந்து வந்தவர் திடீர் மாரடைப்பால் இயற்கை எய்தினார்.

அன்னாரின் மறைவு குறித்த துயரச் செய்தி அறிந்த மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், வணிகர்கள், பொதுமக்கள், விவசாயிகள் என பெரும் திரளானோர் நேரில் அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறிச் சென்றார்கள்.

மேலும் இறுதி ஊர்வலத்தில் பெரும் திரளான கழகத்தினர், பொது மக்கள் பங்கேற்றனர்.



தூத்துக்குடி மாவட்டம் வேப்பலோடை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் 85மாணவர்களுக்கும், 14மாணவிகளுக்கும் “உலகம் உங்கள் கையில்” மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் நடைபெற்ற விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு மடிக்கணினி வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் கல்லூரி முதல்வர் செந்தில் குமரன், ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் காசிவிஸ்வநாதன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றியச் செயலாளர் இம்மானுவேல், ஒன்றிய நெசவாளர் அணி அமைப்பாளர் தங்கசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ,ஆசிரிய ஆசிரியைகள், கலந்து கொண்டனர்.

## அமைச்சர் பி.மூர்த்தியின் பிரமாண்ட ஏற்பாட்டில் – மதுரை வடக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக ஜல்லிக்கட்டு!


# மேலூர் தொகுதி சார்பில் மாபெரும் ஜல்லிக்கட்டு விழா!

## அலங்கா நல்லூர் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்றது! மாணவ – மாணவியர் திரளாகக் கண்டுகளித்தனர்!









கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில் தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிக்கு பெருமைச் சேர்க்கும் வகையில் சட்டமன்றத் தொகுதி வாரியாக அடுத்தடுத்து ஏழு ஜல்லிக்கட்டு விழா நடைபெற்று வருவதின் ஒரு பகுதியாக மதுரை மேலூர் சட்டமன்றத் தொகுதிக்கான ஜல்லிக்கட்டுப் போட்டி அலங்காநல்லூர் கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் மதுரை மேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய மற்றும் நகர்க் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், ஜல்லிக்கட்டு காளை உரிமையாளர்கள், மாடுபிடி வீரர்கள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர். மேலும் நேற்றைய ஜல்லிக்கட்டு போட்டியை காண சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவிகள் வருகைபுரிந்தனர், உற்சாக மிகுதியுடன் ஜல்லிக்கட்டை கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்த மாணவர்களுடன் அமர்ந்து அமைச்சர் பி.மூர்த்தியும் ஜல்லிக்கட்டுப் போட்டியை கண்டுகளித்தார்.